வகுப்பு : 8

தேர்வு எண்

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024-25

## தமிழ்

நேரம் : 2.30 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 100

பகுதி - I

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

அ)சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 15x1=15

1. தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற ----- காரணமாக அமைந்தது.
(அ) ஓவியக்கலை (ஆ) இசைக்கலை (இ) அச்சுக்கலை (ஈ) நுண்கலை
2. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது --------
(அ) விளக்கு (ஆ) கல்வி (இ) விளையாட்டு (ஈ) பாட்டு
3. என் நண்பர் பெரும் புலவராக இருந்தபோதும் -------- இன்றி வாழ்ந்தார்.
(அ) சோம்பல் (ஆ) அகம்பாவம் (இ) வருத்தம் (ஈ) வெகுளி
4. நெடுமை + தேர் என்பதைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் --------
(அ) நெடுதேர் (ஆ) நெடுத்தேர் (இ) நெடுந்தேர் (ஈ) நெடுமைதேர்
5. மலர் பானையை வனைந்தாள் – இத்தொடர் -------- பொருளைக் குறிக்கிறது.
(அ) ஆக்கல் (ஆ) அழித்தல் (இ) கொடை (ஈ) அடைதல்
6. கல்விப் பயிற்சிக்குரிய பருவம் --------
(அ) இளமை (ஆ) முதுமை (இ) நேர்மை (ஈ) வாய்மை
7. பாம்பு! பாம்பு! – இத்தொடரில் இடம்பெற்றுள்ள நிறுத்தற்குறியைத் தேர்க.
(அ) அரைப்புள்ளி (ஆ) வியப்புக்குறி (இ) காற்புள்ளி (ஈ) வினாக்குறி
8. -------- மக்கள் அனையர் --------
கற்றாரோடு ஏனை யவர் – திருக்குறளில் விடுபட்ட, சரியான சீர்களைத் தேர்க.
(அ) இலங்குநூல், எச்சத்தால் (ஆ)பிறர்குற்றம், தக்கார்
(இ) விலங்கொடு, இலங்குநூல் (ஈ) இறைக்கு, தன்குற்றம்
9. 'கோயிலப்பா' என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது.
(அ) கோ + அப்பா (ஆ) கோயில் + லப்பா (இ) கோயில் + அப்பா (ஈ) கோ + இல்லப்பா
10. கோழி என்ற சொல்லுக்குரிய சரியான ஒலிமரபைத் தேர்க.
(அ) கொக்கரிக்கும் (ஆ) கூவும் (இ) பேசும் (ஈ) கரையும்
11. 'பசு மரத்து ஆணி போல' – உவமைத் தொடருக்கான பொருளைத் தேர்க.
(அ) பயனற்ற செயல் (ஆ)எளிதில் மனத்தில் பதிதல்
(இ) தற்செயல் நிகழ்வு (ஈ) ஒற்றுமையின்மை
12. கீழ் இதழும் மேல்வாய்ப்பல்லும் இணைவதால் பிறக்கும் எழுத்து --------
(அ) ம் (ஆ) ப் (இ) ய் (ஈ) வ்
13. உடல் எடை அதிகரிப்பதால் ஏற்படும் நோய்களுள் ஒன்று --------
அ) தலைவலி ஆ) காய்ச்சல் இ) புற்றுநோய் ஈ) இரத்தக் கொதிப்பு
14. பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் ------
அ) வலிமையற்றவர் ஆ) கல்லாதவர் இ) ஒழுக்கமற்றவர் ஈ) அன்பில்லாதவர்
15. "காலை மாலை உலாவிநிதம்
காற்று வாங்கி வருவோரின்
காலைத்தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே!"
இப்பாடலில் இடம் பெற்றுள்ள எதுகையைத் தேர்க.
அ) காலை – வருவோரின் ஆ) காற்று – போவானே
இ) காலன் – கும்பிட்டு ஈ) காலை – மாலை

பொருத்துக. 4x1=4

| | | | |
|---|---|---|---|
| 16. I) | நடந்து | – | அ) முற்றெச்சம் |
| 17. II) | பேசிய | – | ஆ) குறிப்புப் பெயரெச்சம் |
| 18. III) | எடுத்தனன் உண்டான் | – | இ) பெயரெச்சம் |
| 19. IV) | பெரிய | – | ஈ) வினையெச்சம் |

பகுதி – II (பிரிவு – 1)

எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 6x2=12

20. ஓடை எவ்வாறு ஒடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?
21. வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்த்திருத்தங்களில் எவையேனும் இரண்டனை எழுதுக.
22. "புலித்தோல் போர்த்திய பசு" என்னும் உவமையால் திருக்குறள் விளக்கும் கருத்து யாது?
23. விலை கொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?
24. மருத்துவம் எப்போது தொடங்கியது.
25. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

26. தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?
27. யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?

பிரிவு – 2

எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 6X2=12

28. கலைச்சொல் எழுதுக.
அ) Tribes ஆ) Punctuation
29. கொடுக்கப்பட்டுள்ள தொடர்களின் வகையைக் கண்டறிந்து எழுதுக.
அ) கடமையைச் செய் ஆ) பாரதியார் பாடல்களின் இனிமைதான் என்னே!
30. தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?
31. எழுவாய் வேற்றுமை, என்று அழைக்கப்படும் வேற்றுமை எது?
32. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி. இக்குறட்பாவில் அமைந்துள்ள அணியை எழுதுக.
33. உவமைத் தொடரைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க.
மடை திறந்த வெள்ளம் போல்
34. உடலைப் பாதுகாப்பதில் உங்கள் பொறுப்புகள் இரண்டினை எழுதுக.
35. எழுத்துக்களின் பிறப்பு என்றால் என்ன?

பகுதி – III (பிரிவு – 1)

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 2x3=6

36. புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?
37. தமிழ் மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.
38. நோயின் வகைகள், அவற்றைத் தீர்க்கும் வழிகள் பற்றி நீலகேசி கூறுவன யாவை?

பிரிவு – 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க. 2x3=6

39. பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?
40. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

நாம் தமிழ் மக்கள்; நாம் நமது தாய்மொழி வாயிலாகக் கல்வி பெறலே சிறப்பு. அதுவே இயற்கை முறை. போதிய ஒய்வும் நேரமும் இருப்பின் வேறு பல மொழிகளையும் பயிலலாம். ஆனால் முதன்முதல் தாய்மொழி வாயிலாகவே கல்வி பயிலுதல் வேண்டும். தாய்நாடு என்னும் பெயர் தமிழ்மொழியைக் கொண்டு பிறப்பது.

வினாக்கள்:
அ) வேறுமொழிகளை எப்போது பயிலலாம்? ஆ) இயற்கையான கல்விமுறை எது?
இ) இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.
41. தமிழ் எழுத்துக்களில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.

பிரிவு – 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க. 2x3=6

42. வினையெச்சத்தின் வகைகளை விளக்குக.
43. இரண்டாம் வேற்றுமை எத்தனை வகையான பொருள்களில் வரும்? அவை யாவை?
44. ழகர, லகர, ளகர மெய்களின் முயற்சிப் பிறப்பு பற்றி எழுதுக.

பகுதி – IV 2+3=5

45. "தக்கார்" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.
46. அ) வாழ்க நிரந்தரம்! எனத் தொடங்கி இசை கொண்டு வாழியவே! என்பது முடிய தமிழ்மொழி வாழ்த்துப் பாடலை எழுதுக.
(அல்லது)
ஆ) "நன்செய்" எனத் தொடங்கி "இன்பம் கூட்டி" என முடிய உள்ள ஓடை பாடல்.

பகுதி – V 3x6=18

47. கலைத்திருவிழாவில் நாடகப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் ஒன்று எழுதுக.
48. அ) உடல் நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.
(அல்லது)
ஆ) வள்ளைப்பாட்டு என்பது நெல் குத்தும் பொழுது பாடப்படும் பாடலாகும். இதுபோல வேறு எந்தெந்தச் சூழல்களின் என்னென்ன பாடல்கள் பாடப்படுகின்றன?
49. அ) தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.
(அல்லது)
ஆ) காப்பியக் கல்வி குறித்துத் திரு.வி.க கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

பகுதி – VI 2x8=16

50. அ) திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக.
(அல்லது)
ஆ) "வெட்டுக்கிளியும் சருகுமானும்" கதையைச் சுருக்கி எழுதுக.
51. அ) முன்னுரை – நோய் வர காரணங்கள் – நோய் தீர்க்கும் வழிமுறைகள் – வருமுன் காத்தல் – உணவும் மருந்தும் – உடற்பயிற்சியின் தேவை – முடிவுரை.
குறிப்புகளைக் கொண்டு "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.
(அல்லது)
ஆ) நான் விரும்பும் கவிஞர் என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com